# சென்னை முதல் மந்திரி வீட்டில் மறியல்

## தொண்டர்கள் கைது

### தந்திகளுக்குத் தடை

(ஒரு நிருபர்)

சென்னை, ஜூன், 9

நேற்று மாலை (8-6-38) பிரதம மந்திரி வீட்டிற்கு முன்பு சத்தியாக்கிரகம் செய்த ஹிந்தி எதிர்ப்புத் தொண்டர்களான புருஷோத்தமன், தங்கசாமி என்ற இருவர் கைது செய்யப்பட்டு, போலீசாரால் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள்.

இன்று (9-6-38) பிரதம மந்திரி வீட்டிற்கு முன் மறியல் செய்த ஹிந்தி எதிர்ப்புத் தொண்டர்களான வீரபத்திரன், பழனிச்சாமி முதலியவர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டு சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள்.

சென்னை நகரமெங்கும் பரபரப்பாகவே இருக்கிறது. தினசரி சென்னையிலுள்ள ஒவ்வொரு பேட்டையிலும் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. ஹிந்தி எதிர்ப்பு சம்பந்தமான முக்கியமான நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டு தந்தி கொடுத்தால் பெரும்பாலான தந்திகள் ஒப்புக்கொள்ளப்பட்டு அனுப்பாமல் தடை செய்யப்பட்டு வருகிறது. ஹிந்தி எதிர்ப்பு நாளுக்கு நாள் பலப்பட்டு வருகிறது. ஹிந்தி எதிர்ப்புத் தலைமை நிலையத்தைச் சுற்றி சி. ஐ. டி.கள் வட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.